## தினசரி சந்தை நிலவரங்களால் வியக்கத்தக்க மாற்றம்

## வெற்றிக் கதை:

**எஸ்.இளங்கோவன்,**

**ஸ்ரீசரவணா பழமண்டி,**

**எலுமிச்சை மற்றும் பழ வியாபாரம்,**

**650, காந்திரோடு, பண்ரூட்டி.**

**அலைபேசி: 9842343269**



---

வணக்கத்திற்குரியவர்களுக்கு!

நான் பண்ரூட்டி தினசரி சந்தையில் எலுமிச்சை பழம் மொத்தம் மற்றும் சில்லரை வணிகத்தினை மேற்கொண்டு வருகிறேன். உங்களது டி.எம்.ஐ.(DMI)யின் மூலமாக தினசரி சந்தை நிலவரத்தினை எனது அலைபேசியின் மூலமாகவே அனைத்து அருகாமையில் உள்ளசந்தையின் நிலவரத்தினை தெரிந்துகொள்ள முடிகிறது. அதன் வாயிலாக எங்களுக்கும் எங்களிடம் வியாபாரம் செய்யும் நுகர்வோருக்கும் தகுந்த விலையினை ஒப்பிட்டு நிர்ணயம் செய்ய இயலுகிறது.

இது போன்ற அலைபேசி சேவை வேளாண் விளைபொருட்களை குறிப்பாக காய்கறிகள் மற்றும் பழங்களை தகுந்த விலையினை நிர்ணயம் செய்து விற்க உதவுகிறது. இந்த பண்ரூட்டி தினசரி சந்தையில் மட்டும் சுமார்150 காய்கறி மற்றும் பழ கடைகள் உள்ளன. அதனை சார்ந்த எங்களை போன்ற வியாபாரிகளுக்கு இது மிகவும் ஒரு நல்ல சேவை அது மட்டுமல்லாது எங்களையும் மற்றும் இதர காய்கறி வியாபாரிகளையும் சார்ந்து இந்த பண்ரூட்டி நகரை சுற்றி உள்ள அனைத்து விவசாய நண்பர்களும் பயனடைகின்றனர்.

சமீபகாலமாக எலுமிச்சையின் விலை சற்று அதிகமாகவே இருந்து வருகிறது. இதனை வருடத்தில் இந்த மாதத்தில் தான் ஒரு எலுமிச்சை பழத்தின் விலை ரூ.5ஐ தாண்டியுள்ளது. இதற்கு முன் அதிகபட்சமாக ரூ.1 முதல் ரூ.3 வரை மட்டுமே விற்பனை செய்ய முடிந்தது. நாங்கள் இந்த காவலையும் உங்களது அலைபேசி சேவையின் வாயிலாகவே தெரிந்து கொள்ள முடிந்தது.

எலுமிச்சை பழத்தை பொருத்தமட்டில் அதனை சாக்கு பைகளிலும் பிளாஸ்டிக் பைகளுலும் கையால்கிறோம். இந்த விலையேற்றத்தின் மூலமாக விவசாய நண்பர்களும் எங்களை போன்ற வியாபாரிகளுக்கும் ஒரு நன்மை நடந்ததை எண்ணி நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் இந்த விலையேற்றம் என்பது தற்காலிகமான ஒன்றே தவிர நிரந்தரமானது அல்ல.

தமிழ்நாடு வேளாண் பல்பலைக்கழகத்தின் டி.எம்.ஐ.(DMI) இயக்கம் தென்னிந்தியாவில் உள்ள முக்கியமான தினசரி சந்தை நிலவரத்தினை மையமாக கொண்டு விவசாய நண்பர்களுக்கும் எங்களைப் போன்ற வியாபார நண்பர்களுக்கும் உதவியாக இருப்பதை எண்ணி பெருமை அடைகிறோம். இதனை நீங்கள் உங்களது வேளாண் பல்பலைக்கழகத்தின் தனிப்பட்ட இணையதளத்தில் அனைத்து வகையான காய்கனி, பழங்கள் மற்றும் பூக்களின் விலையின் வெளியிடுவதில் நுகர்வோருக்கும் உதவிகரமாக அமைந்துள்ளது.

இது போன்ற தகவல்களை நாங்கள் தங்களது திட்ட ஆய்வாளர் உதவியுடன் தெரிந்துகொள்ள முடிகிறது. கடந்த மூன்று மாதங்களாக இதற்காக தங்களது டி.எம்.ஐ.(DMI) திட்ட இயக்கத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் உங்களது இந்த அலைபேசி சேவை வளர எனது வாழ்த்துக்கள்.


இப்படிக்கு,

எஸ்.இளங்கோவன்,

ஸ்ரீ சரவணா பழமண்டிஎலுமிச்சை

மற்றும் பழ வியாபாரம்,

650, காந்திரோடு,

பண்ருட்டி

அலைபேசி: 9842343269